**OS No.131/2019**

PW 1 - வீராயி

நாள் 20.02.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கொம்புக்காரனேந்தலில் சர்வே எண் 215/16 க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 215/16 தற்போது பூமியில் காலி இடமாக உள்ளது. சர்வே எண் 215/16 வழக்கு தாக்கல் செய்யும் போது தென்வடலாக 40 அடியும், கிழமேலாக எவ்வளவு என்று நினைவில்லை.

வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் சர்வே எண் 215/16 க்கு நத்தம் மனை என்பதால் பட்டா என் பெயரில் இல்லை. பிரதிவாதி பொன்னையா மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் காம்பவுண்டை தாண்டி என்னுடைய இடத்தில் 5 அடி அகலம், 30 நீளத்தில் முள்வேலி போட்டுள்ளார், செப்டிக்டாங்க் வைத்துள்ளார் என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் பிரதிவாதி பொன்னையா செப்டிக்டாங்க் கட்டுவதற்கு முயற்சி செய்ததாக வழக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய இடத்தில் 5 அடி அகலம், 30 நீளத்தில் முள்வேலி போட்டுள்ளார், செப்டிக்டாங்க் கட்ட முயற்சித்தார் என்பதற்கு காவல் நிலையத்தல் ஏதும் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன்.

நீங்கள் மேற்சொன்னவாறு செப்டிக்டாங்க் கட்ட முயற்சி செய்யவோ, முள்வேலி அமைக்கவோ பிரதிவாதி செய்யவில்லை பிரதிவாதிக்கு பாத்தியமான சர்வே எண் 215/14 ல் பிரதிவாதி கட்டியுள்ள சென்டிரிங் வீட்டிற்கு தெற்கே மொத்த விஸ்தீரணத்தில் கிழமேல் 30, தென்வடல் 4 ஆக மொத்தம் 120 அடியில் பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கு பக்க கிழமேல்

சுவருக்கு அடுத்து தெற்கு மேற்கு பக்கம் வாதி உங்களால் ஆக்கிரமிப்பு பகுதியான கிழமேல் 15, தென்வடல் 4 அடி – ல் 60 அடி இடத்தை நீங்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வீட்டிற்கு கிழக்கே போகன் மகன் வரதராஜன் வீடு உள்ளது என்றால் சரிதான். வரதராஜன் பெயரில் பட்டா இல்லை சுவாமிநாதன் பெயரில் பட்டா உள்ளது. சுவாமிநாதன் என்பவரை ஏன் வழக்கில் சேர்ககவில்லை என்றால் அவரை சேர்க்கத்தேவை இல்லை.

நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் சர்வே எண் 215/16 க்கு தாவா சொத்தை பொறுத்த காலி மனை இடத்தில் வடக்கு பக்கமாக பொன்னையா வீடும், சாமிநாதன் வீடும் உள்ள இடத்திற்கு தெற்கே தாவா சொத்தின் காலி இடம் உள்ளது என்றால் சரிதான்.

வாதி தாக்கல் செய்துள்ள சொத்து விபரத்தில் கிழமேல் ஜாதியடி 47 ¾, தென்புறம் 51 ¾. தென்வடல் ஜாதியடி கீழ்புறம் 40, மேல்புறம் 40 என்று உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் வந்து வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் அளக்கும் போது பூமியில் கிழமேல் ஜாதியடி வடபுறம் 31.68 ( 9.6 மீட்டர் ) அடி என்றும், தென்புறம் 34.32 ( 10.4 மீட்டர் ) அடியாகவும், தென்வடல் ஜாதியடி கீழ்புறம் 37.62 ( 11.4 மீட்டர் ) அடியாகவும், மேல்புறம் 37.62 ( 11.4 மீட்டர் ) என்று அளவுகள் தாவா சொத்து விபரத்தில் கண்டுள்ளதை விட குறைவாக இருந்தது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணம் பதிவு பத்திரம் சர்வே எண் 215/16 க்கு உரியது ஆகும். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணம் சர்வே எண் 215/17 க்கு உரியது என்றால் சர்வே எண் மாறியுள்ளதா என்று தெரியவில்லை.

நீங்கள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சர்வே எண் 215/16 க்கு ஆக வடக்கு பக்கம் உள்ள சாமிநாதன் என்பவர் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், நீங்கள் தான் பிரதிவாதி

பொன்னையா என்பவருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 215/14 ல் ஆக்கிரமிப்பு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சர்வே எண் 215/14 ஐ பொறுத்து பிரதிவாதி பெயருக்கு 26.03.1990 ம் தேதியே 0.01.13 சதுர மீட்டருக்கு வருவாய் துறையால் மனை வரி தோராயப்பட்டா எண் 52 என்று பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கு உங்கள் பெயரில் பட்டா வாங்கி உள்ளீர்களா என்றால் வாங்கவில்லை. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 15 தென்வடல் 4 அடி அளவுள்ள 60 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதி எந்தவிதமான இடையூறும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**( பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது )**

**-Sd-**

**Taken down by me in open court**
**readover/interpreted to the witness in Tamil and**
**acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**